தெரிவியுங்கள். என்னவென்றே தெரியவில்லை. எனவே நாளைக்கு என்னிடம் வந்து சொல்லுங்கள் நாளை ஒரு மணி நேரத்திற்கு முன்னர் என்னிடம் வந்து. தெரிவியுங்கள் நான் உங்களுக்கு அனுமதிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. தயவுசெய்து வேண்டாம். இதிலே வேறு ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) திரு. சுதர்சனம், நீங்கள் என்னிடத்தில் எதுவுமே சொல்லவே இல்லை. உட்காருங்கள்.

முற்பகல் 10-15

2. முன்பண மானியக் கோரிக்கைகள், 1993-94, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்.)
A. வருவாய்க் கணக்கில் செலவு.		
1 நில வரித் துறை	..	2,97,03
2 மாநில ஆயத் தீர்வைத் துறை	..	2,35,64
3 மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்.		3,14,35
4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்.		19,17,63
5 முத்திரைத் தாள்கள்—நிருவாகம்	..	96,02
6 பத்திரப் பதிவு	..	6,99,44
7 மாநிலச் சட்டமன்றம்	..	1,43,25
8 தேர்தல்கள்	..	1,05,78

கோரிக்கை—தொடர்ச்சி.		(ரூபாய் ஆயிரத்தில்.)
	A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.	
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.	21,53,05
10	பால் வழங்கு திட்டங்கள் ..	1,92,48
11	மாவட்ட நிருவாகம் ..	67,94,57
12	தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.	3,62,56
13	நீதி நிருவாகம் ..	16,21,31
14	சிறைச்சாலைகள் ..	8,04,94
15	காவல் துறை ..	1,06,80,25
16	தீயணைப்புப் பணிகள் ..	8,26,38
17	கல்வி ..	6,06,77,51
18	மருத்துவம் ..	1,11,25,67
19	பொதுச் சுகாதாரம் ..	74,64,48
20	வேளாண்மை ..	2,12,35,70
21	மீனளம் ..	6,46,19
22	கால்நடை வளர்ப்பு ..	27,24,19
23	கூட்டுறவு ..	24,57,21
24	தொழில்கள் ..	5,90,15
25	கைத்தறியும், துணித் தொழிலும் ..	35,59,75
26	கதர்-கிராமத் தொழில்கள் ..	3,25,40
27	ஊரக வளர்ச்சி ..	1,53,04,04
28	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.	20,40,97

கோரிக்கை—தொடர்ச்சி.	(ரூபாய் ஆயிரத்தில்)
A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.	
29 சமூக நலன் ..	1,46,82,06
30 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.	45,05,89
31 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற் படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்.	13,57,69
32 வீட்டு வசதி ..	8,65,66
33 நகர்ப்பகுதி வளர்ச்சி ..	98,82,19
34 நுகர் பொருள் வழங்கல் ..	1,75,77,21
35 பாசனம் ..	53,47,14
36 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ..	2,37,76
37 பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.	19,50,78
38 சாலைகளும் பாலங்களும்	90,49,61
39 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.	4,26,43
40 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.	9,16,85
41 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மை களும்.	1,84,32,72
42 பல்வகை ..	51,11,35
43 எழுதுபொருள்—அச்சுத்துறை ..	13,78,66
44 காட்டு வளத்துறை ..	15,02,99
45 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ..	16,14,48
46 செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் ..	2,41,04

கோரிக்கை—தொடர்ச்சி.	(ரூபாய் ஆயிரத்தில்.)
A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.	
47 ஊரகத் தொழில்கள் ..	16,78,83
48 குடிநீர் வழங்கல் ..	64,92,43
49 நகராட்சி நிருவாகம் ..	2,73,50
50 சுற்றுலா ..	71,73
51 தமிழ் வளர்ச்சி-பண்பாடு ..	2,38,49
மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ..	25,92,31,43
B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.	
52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..	3,48,49
53 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.	7,04,33
54 பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	42,76,40
55 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.	14,55,24
56 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.	19,63,25
57 சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.	49,19
58 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	12,18,43
59 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.	10,84
60 பல்வகை மூலதனச் செலவு ...	11,23,79
மொத்தம் B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.	1,11,49,96

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

க—தொடர்ச்சி.

(ரூபாய்
ஆயிரத்தில்.)

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை—தொடர்ச்சி.

61	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.	1,42,50,59
	பெரு மொத்தம் ..	28,46,31,98

3. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1992–93, அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டிற்கான இறுதித்துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இந்த மன்றத்தின்முன் வைப்பதற்கு முன்னால், 1992–93 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளைப் பற்றிய ஆவணங்களும் உறுப்பினர்களுக்கு அவரவர்களுடைய அறைகளுக்கும், இல்லங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் கூறிவிட்டு, நான் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

1992-93 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் முன் வைக்கிறேன். இத்துணை மதிப்பீடுகளில் ரூ. 1,355.80 கோடி வருவாய்க்கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ. 260.33 கோடி மூலதன, கடன் கணக்கிலும் அடங்கும்.

இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேரவேண்டிய வழிவகை முன்பணங்கள், வட்டி, நிலையான கடன்களின் ஒரு பகுதி ஆகியவற்றைச் சரிக்கட்டல் செய்வதற்காக, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பாக ''மானியக் கோரிக்கை எண் 20. வேளாண்மை'' என்ற தலைப்பின் கீழ் ரூ 464.68 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சரிக்கட்டலுடன், 1992-93 ஆம் ஆண்டு முடிவில் உள்ளபடி, தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சேரவேண்டிய மொத்த உதவித் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்படும்.